# கொழுக்கட்டை குடும்பத்தினருக்கு
# கணக்கிடும் விதம்

நமது முன்னோர்கள் அருள்மிகு நாகரம்மனுக்கு கொழுக்கட்டையினை நிவேதனம் செய்யும்போது ஒவ்வொரு குடும்பதாருக்கும் எவ்வளவு கொழுக்கட்டை தயார் செய்யவேண்டுமென கணக்கீடு செய்துள்ளார்கள்.

ஒரு குடும்பம் என்றால் கணவன், மனைவி மற்றும் பிள்ளைகள் ஆகும். உதாரணமாக ஒரு குடும்பத் தலைவருக்கு 5 குழந்தைகள் என்று வைத்துக் கொள்வோம். (3 ஆண் குழந்தைகள், 2 பெண் குழந்தைகள்) அவர் நாகரம்மனுக்கு படைக்கவேண்டிய கொழுக்கட்டை 7 எண்ணங்கள் ஆகும். பெண் குழந்தைகளை திருமணம் செய்து கொடுத்தாலும் அவர்களுக்குரிய எண்ணத்தினை குறைக்காமல் (குறைந்தது ஒன்று) கொழுக்கட்டை சுட்டு மகள் வீட்டிற்கு கொண்டு சென்று கொடுத்தல் அவசியம்.

இன்றைய காலகட்டத்தில் எத்தனை கொழுக்கட்டைகள் தயார் செய்ய வேண்டுமென்ற அளவீடு தெரியாதவர்கள் அவர்கள் குடும்ப உறுப்பினர்கள் எத்தனை பேர் உள்ளனரோ அதை மனதில் நினைத்து நாகரம்மனை வேண்டுதல் வேண்டும். அதுதான் அவர்களது எண்ணிக்கை. அதுபோக நண்பர்களுக்கோ, பிறருக்கோ செய்து கொடுக்கும் கொழுக்கட்டை குடும்ப எண்ணிக்கையில் சேராது. தாய், தந்தை இல்லாத குடும்பத்தினர் தங்களது திருமணமான சகோதரிகளுக்கும் கணக்கு சேர்த்து கொழுக்கட்டை சுட்டு சகோதரிகளது வீட்டில் கொண்டு போய் கொடுத்தல் வேண்டும். (இது நம் முன்னோர்கள் செய்து வந்த வழக்கம்.)

சுபம்

FLASH Graphics Ngl. Ph : 220320